அரசு மேனிலைப் பள்ளி, பொதுக்குடி

10 அறிவியல் 1 மார்க் தேர்வு காலாண்டு பாடங்கள்

1. கீழ்க்கண்டவற்றுள் நிலைமம் எதனைச் சார்ந்தது?
அ) பொருளின் எடை ஆ) கோளின் ஈர்ப்புமுடுக்கம் இ) பொருளின் நிறை ஈ) அ மற்றும் ஆ

2. கணத்தாக்கு கீழ்க்கண்டவற்றுள் எதற்குச் சமமானது?
அ) உந்தமாற்று வீதம் ஆ) விசை மற்றும் காலமாற்று வீதம் இ) உந்தமாற்றம் ஈ) நிறை மாற்ற வீதம்

3. விசையின் சுழற்சி விளைவு கீழ்காணும் எந்த விளையாட்டில் பயன்படுகிறது?
அ) நீச்சல் போட்டி ஆ) டென்னிஸ் இ) சைக்கிள் பந்தயம் ஈ) ஹாக்கி

4. 1 கிகி எடை என்பது _______________ ற்கு சம்மாகும்.
அ) 9.8 டைன் ஆ) $9.8 \times 10^4$ N இ) $98 \times 10^4$ டைன் ஈ) 980 டைன்

5. ராக்கெட் ஏவுதலில் _____________________விதி/கள் பயன்படுகிறது.
அ) நியூட்டனின் மூன்றாம் விதி ஆ) நியூட்டனின் பொது ஈர்ப்பியல் விதி
இ) நேர்கோட்டு உந்த மாறாக் கோட்பாடு ஈ) அ மற்றும் இ

6. பொருளின் அளவிற்கு சமமான தலைகீழான மெய்பிம்பம் கிடைக்க பொருள் வைக்கப்பட வேண்டிய தொலைவு
அ) f ஆ) ஈறிலாத் தொலைவு இ) 2f ஈ) f க்கும் 2f க்கும் இடையே

7. விழி ஏற்பமைவு திறன் குறைபாட்டை சரி செய்ய உதவுவது
அ) குவி லென்சு ஆ) குழி லென்சு இ) குவி ஆடி ஈ) இரு குவிய லென்சு

8. ஒரு லென்சின் திறன் -4 எனில் அதன் குவியத் தொலைவு
அ) 4 மீ ஆ) -40 மீ இ) –0.25 மீ ஈ) –2.5 மீ

9. மின்விளக்கு ஒன்று குவிலென்சு ஒன்றின் முதன்மைக் குவியத்தில் வைக்கப்பட்டுள்ளது. மின்விளக்கு ஒளியூட்டப்படும் போது குவிலென்சானது
அ) விரிக்கும் கற்றைகளை உருவாக்கும் ஆ) குவிக்கும் கற்றைகளை உருவாக்கும்.
இ) இணைக் கற்றைகளை உருவாக்கும் ஈ) நிறக் கற்றைகளை உருவாக்கும்

10. குவிலென்சின் உருப்பெருக்கமானது எப்போதும் _________ மதிப்புடையது.
அ) நேர்க்குறி ஆ) எதிர்க்குறி
இ) நேர்க்குறி அல்லது எதிர்க்குறி ஈ) சுழி

11. பொது வாயு மாறிலியின் மதிப்பு
அ) 3.81 J மோல்$^{-1}$ K$^{-1}$ ஆ) 8.03 J மோல்$^{-1}$ K$^{-1}$ இ) 1.38 J மோல்$^{-1}$ K$^{-1}$ ஈ) 8.31 J மோல்$^{-1}$ K$^{-1}$

12. ஒரு பொருளை வெப்பப்படுத்தினாலோ அல்லது குளிர்வித்தாலோ அப் பொருளின் நிறையில் ஏற்படும் மாற்றம்
அ) நேர்க்குறி ஆ) எதிர்க்குறி இ) சுழி ஈ) இவற்றில் எதுவுமில்லை

13. கொடுக்கப்பட்டுள்ள படத்தில் வெப்ப ஆற்றல் பரவும் திசைகள்
அ) A<-B, A<-C, B<-C ஆ) A->B, A->C, B->C இ) A->B, A<-C, B->C ஈ) A<-B, A->C, B->C

14.மின்தடையின் SI அலகு
அ) மோ ஆ) ஜூல் இ) ஓம் ஈ) ஓம் மீட்டர்

15. கீழ்க்கண்டவற்றுள் எது சரியானது?
அ) மின்னூட்டம் பாயும் வீதம் மின்திறன் ஆ) மின்னூட்டம் பாயும் வீதம் மின்னோட்டம்
இ) மின்னாற்றல் பாயும் வீதம் மின்னோட்டம் ஈ) மின்னோட்டம் பாயும் வீதம் மின்னூட்டம்

16. கிலோ வாட் மணி என்பது எதனுடைய அலகு?
அ) மின்தடை எண் ஆ) மின்கடத்து எண் இ) மின் ஆற்றல் ஈ) மின் திறன்

17. கீழ்க்கண்டவற்றுள் எது மூவணு மூலக்கூறு
அ) குளுகோஸ் ஆ) ஹீலியம் இ) கார்பன் டை ஆக்சைடு ஈ) ஹைட்ரஜன்

18. ஆக்சிஜனின் கிராம் மூலக்கூறு நிறை
அ) 16 கி ஆ) 18 கி இ) 32 கி ஈ) 17 கி

www.Padasalai.Net

19. திட்ட வெப்ப அழுத்த நிலையில் 1 மோல் ஈரணு மூலக்கூறு வாயுவின் பருமன்

அ) 11.2 லி ஆ) 5.6 லி இ) 22.4 லி ஈ) 44.8 லி

20. 1 மோல் நைட்ரஜன் அணுவின் நிறை

அ) 28 amu ஆ) 14 amu இ) 28 கி ஈ) 14 கி

21. திட்ட வெப்ப அழுத்த நிலையில் 4.4 கி CO2 ன் பருமன்

அ) 22.4 லி ஆ) 2.24 லி இ) 0.24 லி ஈ) 0.1 லி

22. 1 மோல் எந்த ஒரு பொருளும் _________மூலக்கூறுகளைக் கொண்டிருக்கும்.

அ)6.023 1023 ஆ) 6.023 10-23 இ) 3.0115 1023 ஈ) 12.046 1023

23. ஹேலஜன் குடும்பம் எந்த தொகுதியைச் சார்ந்தது?

அ) 17 வது ஆ) 15 வது இ) 18 வது ஈ) 16 வது

24. ஆவர்த்தன் அட்டவனையிலுள்ள தொடர்கள் மற்றும் தொகுதிகளின் எண்ணிக்கை____

அ) 6, 16 ஆ) 7, 17 இ) 8, 18 ஈ) 7, 18

25. நவீன ஆவர்த்தன விதியின் அடிப்படை ______

அ) அணு எண் ஆ) அணு நிறை

இ) ஐசோடோப்பின் நிறை ஈ) நியூட்ரான்களின் எண்ணிக்கை

26. துருவின் வாய்பாடு _____

அ) FeO. $xH_2o$ ஆ) $FeO_4$. $xH_2o$ இ) $Fe_2O_3$. $xH_2o$ ஈ) FeO

27. இரசக்கலவை உருவாக்கலின் தேவைப்படும் முக்கியமான உலோகம் ________

அ) Ag ஆ) Hg இ) Mg ஈ) Al

28. இருமடி கரைசலிலுள்ள கூறுகளின் எண்ணிக்கை

அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

29. 25% ஆல்கஹால் கரைசல் என்பது

அ) 100 மிலி நீரில் 25 மிலி ஆல்கஹால் ஆ) 25 மிலி நீரில் 25 மிலி ஆல்கஹால்

இ) 75 மிலி நீரில் 25 மிலி ஆல்கஹால் ஈ) 25 மிலி நீரில் 75 மிலி ஆல்கஹால்

30. கீழ்க்கண்டவற்றுள் எது சர்வ கரைப்பான் எனப்படுவது?

அ) அசிட்டோன் ஆ) பென்சீன் இ) நீர் ஈ) ஆல்கஹால்

31. நீரற்ற கரைசலை அடையாளம் காண்க.

அ) நீரில் கரைக்கப்பட்ட உப்பு ஆ) நீரில் கரைக்கப்பட்ட குளுக்கோஸ்

இ) நீரில் கரைக்கப்பட்ட காப்பர் சல்பேட் ஈ) $CS_2$ ல் கரைக்கப்பட்ட சல்பர்

32. குறிப்பிட்ட வெப்பநிலையில் அழுத்தத்தை அதிகரிக்கும்போது நீர்மத்தில் வாயுவின் கரைதிறன் _____

அ)மாற்றமில்லை ஆ) அதிகரிக்கிறது இ) குறைகிறது ஈ) வினைஇல்லை.

33. ஈரம் உறிஞ்சிக் கரையும் சேர்மங்கள் உருவாகக் காரணம்_________.

அ) ஈரம் மீது அதிக நாட்டம் ஆ) ஈரம் மீது குறைந்த நாட்டம்

இ) ஈரம் மீது நாட்டம் இன்மை ஈ) ஈரம் மீது மந்தத்தன்மை

34. கீழ்கண்டவற்றுள் எது நீர் உறிஞ்சும் தன்மையுடையது.________

அ) ஃபெரிக் குளோரைடு ஆ) காப்பர் சல்பேட் பென்டாஹைட்ரேட்

இ) சிலிக்கா ஜெல் ஈ) இவற்றுள் எதுமில்லை.

35. உள்நோக்கிய சைலம் என்பது இதன் சிறப்புப் பண்பாகும்?

அ) வேர் ஆ) தண்டு இ) இலைகள் ஈ) மலர்கள்

36. காற்றில்லா சுவாசத்தின் மூலம் உருவாவது.

அ) கார்போஹைட்ரேட் ஆ) எத்தில் ஆல்கஹால்

இ) அசிட்டைல் கோ.ஏ ஈ) பைருவேட்

www.Padasalai.Net

37. கிரப் சுழற்சி இங்கு நடைபெறுகிறது.
அ) பசுங்கணிகம் ஆ) மைட்டோகாண்ட்ரியாவின் உட்கூழ்ம மேட்ரிக்ஸ்
இ) புறத்தோல் துளை ஈ) மைட்டோகாண்ட்ரியாவின் உட்புறச் சவ்வு

38. சைலமும், புளோயமும் ஒரே ஆரத்தில் அருகருகே அமைந்து காணப்படுவது _____ எனப்படும்.
அ) ஆரப்போக்கு அமைப்பு ஆ)சைலம் சூழ் வாஸ்குலார் கற்றை
இ) ஒன்றிணைந்தவை ஈ) இவற்றில் எதுவுமில்லை

39. ஒளிச்சேர்கையின் போது எந்த நிலையில் ஆக்ஸிஜன் உற்பத்தியாகிறது?
அ) ATP யானது ADP யாக மாறும்போது ஆ) CO2 நிலை நிறுத்தப்படும் போது
இ) நீர் மூலக்கூறுகள் பிளக்கப்படும் போது ஈ) இவை அனைத்திலும்.

40. காஸ்பேரியன் பட்டைகள் வேரின் __________ பகுதியில் காணப்படுகிறது.
அ) புறணி ஆ) பித் இ) பெரிசைக்கிள் ஈ) அகத்தோல்

41. அட்டையின் உடலில் உள்ள கண்டங்களின் எண்ணிக்கை.
அ) 23 ஆ) 33 இ) 38 ஈ) 30

42. அட்டையின் உடற்கண்டங்கள் இவ்வாறு அழைக்கப்படுகிறது.
அ) மெட்டாமியர்கள் (சோமைட்டுகள்) ஆ) புரோகிளாட்டிடுகள் இ) ஸ்ட்ரோபிலா ஈ) அனைத்தும்

43. அட்டையின் மூளை இதற்கு மேலே உள்ளது
அ) வாய் ஆ) வாய்க்குழி இ) தொண்டை ஈ) தீனிப்பை

44. பாலூட்டிகள் ____________ விலங்குகள்.
அ) குளிர் இரத்த ஆ) வெப்ப இரத்த இ) பாய்கிலோதெர்மிக் ஈ) இவை அனைத்தும்

45. அட்டையின் இடப்பெயற்சி உறுப்புகள்
அ) முன் ஒட்டுப்பு ஆ) பின் ஒட்டுறுப்பு இ) சீட்டாக்கள் ஈ) தசைகளின் சுருக்கம் மற்றும் நீளுதல்

46. இளம் உயிரிகளை பிரசவிக்கும் விலங்குகள்
அ) ஓவிபேரஸ் ஆ) விவிபேரஸ் இ) ஓவோவிவிபேரஸ் ஈ) அனைத்தும்

47. இரத்தத்தை உறிஞ்சும் அட்டையின் பண்பு ________ என் அழைக்கப்படுகிறது.

48. பல் வாய்பாட்டின் அடிப்படையில் முயலில் காணப்படாத பல்வகை__________.
அ) கடைவாய்ப்பல் ஆ) முன்கடைவாய்ப்பல் இ) வெட்டுப்பல் ஈ) கோரைப்பல்

49. நீராவிப்போக்கின் பொழுது வெளியேற்றப்படுவது
அ) கார்பன் டை ஆக்சைடு ஆ) ஆக்சிஜன் இ) நீர் ஈ) இவை ஏதுமில்லை

50. கீழ்க்கண்ட எந்த நிகழ்ச்சிக்கு ஆற்றல் தேவை?
அ) செயல்மிகு கடத்துதல் (ஆற்றல் சார் கடத்துதல்) ஆ) பரவல்
இ) சவ்வூடு பரவல் ஈ) இவை அனைத்தும்

51. வேரின்மூலம் உறிஞ்சப்பட்ட நீரானது தாவரத்தின் மேற்பகுதிக்கு இதன்மூலம் கடத்தப்படுகிறது?
அ) புறணி ஆ) புறத்தோல் இ) புளோயம் ஈ) சைலம்

52. வேர்த் தூவிகளானது ஒரு
அ) புறணி செல்லாகும் ஆ) புறத்தோலின் நீட்சியாகும
இ) ஒரு செல் அமைப்பாகும் ஈ) ஆ மற்றும் இ

53. இதயத்தின் இதயம் என அழைக்கப்படுவது
அ) SA கணு ஆ) AV கணு இ) பர்கின்ஜி இழைகள் ஈ) ஹிஸ் கற்றைகள்

54. விபத்து காரணமாக 'O' இரத்த வகையை சார்ந்த ஒருவருக்கு அதிக இரத்த இழப்பு ஏற்படுகிறது. இந்நிலையில் அவருக்கு எந்த இரத்த வகையை மருத்துவர் செலுத்துவார்?
அ) 'O' வகை ஆ) 'AB' வகை இ) A அல்லது B வகை ஈ) அனைத்து வகை

55. மனித இதயத்தின் சுவர் எதனால் ஆனது?
அ) எண்டோகார்டியம் ஆ) எபிகார்டியம் இ) மையோகார்டியம் ஈ) மேற்கூறியவை அனைத்தும்

56. நவீன உடற்செயலியலின் தந்தை என அழைக்கப்படுபவர்.
அ) ஹிஸ் ஏட்ரியோ ஆ) வில்லியம் ஹார்வி இ) காரல் லேண்ட்ஸ்டீனர் ஈ) எட்வர்ட்

57. இரத்த ஓட்டத்தின் சரியான வரிசை எது?
அ) வெண்ட்ரிக்கிள் -> ஏட்ரியம் --> சிரை ------> தமனி
ஆ) ஏட்ரியம் -> வெண்ட்ரிக்கிள் -> சிரை -> தமனி
இ) ஏட்ரியம் -> வெண்ட்ரிக்கிள் -> தமனி -> சிரை
ஈ) வெண்ட்ரிக்கிள் -> சிரை -> ஏட்ரியம் -> தமனி

58. இரத்த வகைகளை கண்டறிந்தவர்
அ) வியன்னர் ஆ) காரல் லேண்ட்ஸ்டீனர் இ) வில்லியம் ஹார்வி ஈ) ஹிஸ்

59. மீன்களின் இதயம் _____அறைகளைக் கொண்டது.
அ) 3 ஆ) 4 இ) 2 ஈ) 5

60. இருமுனை நியூரான்கள் காணப்படும் இடம்
அ) கண் விழித்திரை ஆ) பெருமூளைப் புறணி இ) வளர்கரு ஈ) சுவாச எபிதீலியம்.

61. மூளையின் இரு பக்கவாட்டு கதுப்புகளையும் இணைக்கும் நரம்புப் பகுதி எது?
அ) தலாமஸ் ஆ) ஹைப்போதலாமஸ் இ) பான்ஸ் ஈ) கார்பஸ் கலோசம்

62. ரேன்வீர் கணுக்கள் காணப்படும் இடம்.
அ) தசைகள் ஆ) ஆக்சான்கள் இ) டெண்ட்ரைட்டுகள் ஈ) சைட்டான்

63. வாந்தியெடுத்தலைக் கட்டுப்படுத்தும் மையம்
அ) முகுளம் ஆ) வயிறு இ) மூளை ஈ) ஹைப்போதலாமஸ்

64.______ இணை மூளை நரம்புகளும் ______இணை தண்டுவட நரம்புகளும் காணப்படுகிறது
அ) 12,31 ஆ) 31,12 இ) 2.13 ஈ) 12,21

65. கீழ்க்கண்டவற்றுள் நரம்புசெல்லில் காணப்படாதது
அ) நியூரிலெம்மா ஆ) சார்கோலெம்மா இ)ஆக்சான் ஈ)டெண்டிரான்கள்

66. ஒருவர் விபத்தின் காரணமாக உடல் வெப்பநிலை, நீர்ச்சமநிலை மற்றும் பசி எடுத்தல்,......
அ) முகுளம் ஆ) பெருமூளை இ) பான்ஸ் ஈ) ஹைபோதலாமஸ்

67. மூளை உறையினுள் வெளிப்புறமாக காணப்படும் உறையின் பெயர்
அ) அரக்னாய்டு சவ்வு ஆ) பையாமேட்டர் இ) டியூரா மேட்டர் ஈ) மையலின் உறை

68. கீழ்க்கண்டவற்றுள் தலைமைச் சுரப்பி என கருதப்படுவது எது?
அ) பினியல் சுரப்பி ஆ) பிட்யூட்டரி சுரப்பி இ) தைராய்டு சுரப்பி ஈ) அட்ரினல் சுரப்பி

www.Padasalai.Net

69. கீழ்க்கண்டவற்றுள் எது நாளமுள்ள சுரப்பியாகவும் நாளமில்லா சுரப்பியாகவும் செயல்படுகிறது?

அ) கணையம் ஆ) சிறுநீரகம் இ) கல்லீரல் ஈ) நுரையீரல்

70. நுனி ஆதிக்கத்தின் மீது நேர் விளைவை உருவாக்கும் ஹார்மோன்

அ) சைட்டோகைனின் ஆ) ஆக்சின் இ) ஜிப்ரல்லின்கள் ஈ) எத்திலின்

71. கீழுள்ளவற்றில் நாளமுள்ள சுரப்பியை அடையாளம் காண்க.

அ) பிட்யூட்டர் சிரப்பி ஆ) அட்ரினல் சுரப்பி

இ)உமிழ்நீர் சுரப்பி ஈ) தைராய்டு சுரப்பி

71. கரும்பில் உற்பத்தியாகும் சர்க்கரையின் அளவை அதிகரிக்க அதன்மீது _____ தெளிக்கப்படுகிறது.

அ) ஆக்சின் ஆ) சைட்டோகைனின் இ) ஜிப்ரலின்கள் ஈ) எத்திலின்

72. பின்வருவனவற்றுள் எந்த ஹார்மோன் இயற்கையாக தாவர்ங்களில் காணப்படுவதில்லை?

அ) 2,4D ஆ) GA 3 இ) ஜிப்ரல்லின் ஈ) IAA

73. அவினா முளைக்குருத்து ஆய்வு __________ என்பவரால் மேற்கொள்ளப்பட்ட்து.

அ) டார்வின் ஆ N ஸ்மித் இ) பால் ஈ) F.W.வெண்ட்

74. _______ தேங்காயின் இளநீரில் அதிகமாக்க் காணப்படுகிறது

அ) ஆக்சின் ஆ) சைட்டோகைனின் இ) ஜிப்ரல்லின்கள் ஈ) எத்திலின்

75. இலைகள் மூலம் இனப்பெருக்கம் செய்யும் தாவரம்

அ) வெங்காயம் ஆ) வேம்பு இ) இஞ்சி ஈ) பிரையோபில்லம்

76. சின்கேமியின் விளைவால் உருவாவது

அ) சூஸ்போர்கள் ஆ) கொனிடியா இ சைகோட்(கருமுட்டை) ஈ) கிளாமிடோஸ்போர்

77. விந்து உருவாக்கத்திற்கு ஊட்டமளிக்கும் பெரிய நீட்சியடைந்த செல்கள்

அ) முதல்நிலை விந்து வளர் உயிரணு ஆ) செர்டோலி செல்கள்

இ) லீடிக் செல்கள் ஈ) ஸ்பெர்மெட்டொகோனியா.

78. மூடிய விதையுடைய தாவரங்களில் ஆண் கேமீட் எவ்வகை செல்லிலிருந்து உருவாகிறது?

அ) உற்பத்தி செல் ஆ) உடல்செல் இ) மகரந்ததாள் தாய்செல் ஈ) மைக்ரோஸ்போர்

79. ஈஸ்ட்ரோஜனை உற்பத்தி செய்வது

அ) பிட்யூட்டரியின் முன்கதுப்பு ஆ) முதன்மை பாலிக்கிள்கள்

இ) கிராபியன் பாலிக்கிள்கள் ஈ) கார்பஸ் லூட்டியம்

80. பாலிலா இனப்பெருக்க முறையான மொட்டு விடுதல் மூலம் இனப்பெருக்கம் செய்யும் உயிரினம்?

அ) அமீபா 2) ஈஸ்ட் இ) பிளாஸ்மோடியம் ஈ) பாக்டீரியா

81. மலரின் இன்றியமையாத பாகங்கள்

அ) புல்லிவட்டம், அல்லிவட்டம் ஆ) புல்லிவட்டம், மகரந்தத்தாள் வட்டம்

இ) அல்லிவட்டம், சூலகவட்டம் ஈ) மகரந்தத்தாள் வட்டம், சூலக வட்டம்.

82. காற்றின் மூலம் மகரந்தச் சேர்க்கை நடைபெறும் மலர்களில் காணப்படும் பண்புகள்

அ) காம்பற்ற சூல்முடி ஆ) சிறிய மென்மையான சூல்முடி

இ) வண்ண மலர்கள் ஈ) பெரிய இறகு போன்ற சூல்முடி

83. கீழ்க்கண்டவற்றுள் எது IUCD?
அ) காப்பர்-டி ஆ) மாட்டிரைகள்(Oral Pills) இ) கருத்தடை திரைச்சவ்வு ஈ) அண்ட நாளத் துடிப்பு

84. முதிர்ந்த மகரந்தத் தூளின் உற்பத்தி செல்லில் நடைபெறும் செல்பிரிதல் வகை.
அ) மைட்டாசிஸ் ஆ) மியாசிஸ் இ) ஏ மைட்டாசிஸ் ஈ) ஆ மற்றும் இ

85. செல் பகுப்படையும் போது ஸ்பிண்டில் நார்கள் குரோமோசோமுடன் இணையும் பகுதி
அ) குரோமோமியர் ஆ) செண்ட்ரோசோம் இ) சென்ட்ரோமியர் ஈ) குரோமோனீமா

86. எந்நிகழ்ச்சியின் காரணமாக 9:3:3:1 உருவாகிறது?
அ) பிரிதல் ஆ) குறுக்கே கலத்தல் இ) சார்பின்றி ஒதுங்குதல் ஈ) ஒடுங்கு தன்மை

87. சென்ட்ரோமியர் மையத்தில் காணப்படுவது __________வகை குரோமொசோம்.
அ) டீலோ சென்ட்ரிக் ஆ)மெட்டா சென்ட்ரிக் இ)சப்-மெட்டா சென்ட்ரிக் ஈ)அக்ரோசென்ட்ரிக்

88.. டி.என்.ஏ. வின் முதுகெலும்பாக ________________உள்ளது.
அ) டீ ஆக்ஸி ரைபோஸ் சர்க்கரை ஆ) பாஸ்பேட்
இ) நைட்ரஜன் காரங்கள் ஈ) சர்க்கரை பாஸ்பேட்

89. ஒகசாகி துண்டுகளை ஒன்றாக இணைப்பது__________.
அ) ஹெலிகேஸ் ஆ) டி.என் ஏ. பாலிமெரேஸ் இ)ஆர்.என்.ஏ.பிரைமர் ஈ) டி.என்.ஏ.லிகேஸ்

90. மனிதரில் காணப்படும் குரோமோசோம்களின் எண்ணிக்கை ________
அ) 22 ஜோடி ஆட்டோசோம்கள் 1 ஜோடி அல்லோசோம்கள்
ஆ) 22 ஜோடி ஆட்டோசோம்கள் 1 அல்லோசோம்
இ) 46 ஆட்டோசோம்கள்
ஈ) 46 ஜோடி ஆட்டோசோம்கள் 1 ஜோடி அல்லோசோம்கள்

91. பன்மய நிலையில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குரோமோசோம்களை இழத்தல் _______ என அழைக்கப்படுகிறது.
அ) நான்மய நிலை ஆ) அன்யூபிளாய்டி இ) யூபிளாய்டி ஈ) பல பன்மய நிலை